ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

10.09.2026

1. எம் தந்தையே தாயே தயாபரனே
ஏழைக்கு இரங்கும் சரவணப் பெருமானே
நம்பிக்கை வைத்து உன் வழி வருபவர்க்கு
ஞானமும் சகலவரமும் அருளும் வேலவனே

2. வேலவனே உன் புகழ் பாடியே
விளம்புவேன் ஆறுமுக அரங்கனும்
காலமதில் பராபவ யாளி திங்களில்
கணக்காய் சதுர் குருவார அருளாசியை

3. அருளாசியை உலகோர் நலமுற உரைப்பேன்
ஆற்றல்பட வேலவன் அருளுகின்ற
வரம் பெற்ற பிரணவக் குடில் தன்னை
வணங்கி உலக மக்கள் எல்லாம் வர

4. வருகவே வேலவனோடு அரங்கனும்
வரம் தந்து சோதி வடிவினிலே
அருளும் பொருளும் ஞானபலமும்
அளவிலா தந்தருளுகின்றோம்

5. அருளவே பிரணவக் குடிலின்
அன்னதானமதை உண்டு இனிதே
வரம் கூட்டும் தரும வழிதனில்
வழிகாட்டியாகப் பொருளுதவி செய்து

6. செய்துமே உலகோரும் பின்பற்ற
சேவை தனக்கு வழிகாட்டி வர
அய்யமற ஞானிகள் பலரின் ஆசி
அனுகூலமாகி வரங்கள் பெருகி

7. பெருகியே தானும் சிறக்க தன்னோடு
புகழ்பெற குடியவர்க்கும் வரம் கிட்டி
முருகப்பெருமான் துணை நிற்கும்
முழுமை கண்ட ஞானக்குடி ஆவர்

8. ஆவரே அரங்கன் யான் தேற்றும்
அருளாளர்களாக தருமவான்களாக

புவனத்தில் அனைவரும் சிறந்து
புண்ணிய உலகம் படைப்பர்

9. படைக்கவே வேலவன் ஆசிபட
பழுதில்லா ஞானவான் தலைமை
தடையில்லா ஞானிகள் ஆட்சியாக
தரணியில் மாற்றம் நிகழும்

10. நிகழவே அரங்கன் யான் காட்டும்
நீதி நெறி சைவநெறி விட்டு அகலா
மகிழவே மக்களெல்லாம் தொடர
மரணம் வெல்லும் மாண்பும் தேறி

11. தேறியே ஞானிகள் ஆவர்
தெரிவிப்பேன் அரங்கன் என் வழி
பெருமை மிக்க தொண்டர்படை பெருக
பேருலகே அற்புதம் பல காணும்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி